லெப். கேணல் ஜோனி (விக்கினேஸ்வரன் விஜயகுமார்)

இவர் பேராதனை பல்கலை கழகத்தில் பௌதீக விஞ்ஞான மாணவனாய் கல்வி கற்று கொண்டிருந்த காலத்தில் தன்னை விடுதலை போராட்டத்திற்காய் இணைத்த ஒரு போராளி.

இந்தியா விடுதலை புலிகளிற்கும் பயிற்சி வழங்க முன்வந்த போது தலைவர் தொலைத் தொடர்பு மற்றும் அது சம்பந்தமான தொழில்நுட்பப் பயிற்சிகளிற்கு ஜோனியை தெரிவு செய்து அனுப்பிருந்தார்.

அப்போது புலிகளிடம் தொலை தொடர்பு வசதிகள் அவ்வளவாக இல்லாத கால கட்டம். யாராவது மிக நம்பிக்கையான ஒருவர்தான் செய்திகளை காவிசென்று மற்றைய போராளி களிற்கு தெரிவிப்பது வழமை. அப்படி புலி களின் ஆரம்பகாலத்தில் இருந்தே பல இரக சிய செய்திகளைத் தாங்கி எடுத்து செல்பராக இருந்தவர்களில் முக்கியமானவர் ஜோனி.

1984ம் ஆண்டு ஆவணி மாதம் பொலிகண்டி பகுதியில் ஒரு எதிர்பாராத விதமாக மோதல் புலிகளிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் ஏற்படுகின்றது இராணுவத்திற்கு துணையாக பருத்தி துறை முகாம் இலங்கை கடற்படையும் இணைந்து கொள்ள அந்த மோதல் ஒரு தொடர் சண்டையாக மாறிவிட்டது அது இரண்டாம் நாளும் தொடர்ந்தது

அந்த காலகட்டதில் புலிகள் அமைப்பில் இருந்த அனேகமான போராளிகள் அந்த சண்டை நடந்த இடத்திற்கு போய் சேர்ந்திருந்தனர்.

அவர் வழமை போல பொலிகண்டி பகுதியில் சண்டையில் ஈடுபட்டிருந்த போராளிகளிற்கு சில செய்திகளை எடுத்து செல்லவும் அங்கு கள நிலைமைகளை அறிந்து வரவும் பண்டிதரின் முகாமில் இருந்து தயாராகிறார்.

ஆனால் சண்டைக்காக ஆயுதங்கள் அனைத்தையும் மற்றைய போராளிகள் எடுத்து சென்றுவிட்டதால் பாவனைக்கு உதவாது என்று கைவிடப்பட்ட ஒரு 4.5 வகை றீற்றா கைத்துப்பாக்கியை எடுத்து இயக்கி பார்க்கி றார். அது பலதடைவை இயக்கினால் ஒரு தடவை தான் அதன் விசை இயங்கும். அதில் குண்டுகளை நிரப்பி இடுப்பில் செருகி கொண்டு கட்டியிருந்த சாரத்தினை மடித்து கட்டிக் கொண்டு புறப்படுகிறார்.

திழலாடும் நினைவுகள்

எழுதியவர்: **சிறி**

பருத்தி துறை கெருடாவில் பகுதியில் ஒரு ஒழுங்கையில் இவர் போய்க் கொண்டிருக்கும் போது அங்கு மறைந்திருந்த ஒரு இராணுத் தினன் திடீரென ஜோனியை நோக்கி தனது துப்பாக்கியை நீட்டியபடி அருகில் வரும்படி அழைக்கிறான்.

ஜோனி சைக்கிளை விட்டு இறங்கி அதை உருட்டியபடி அவனருகில் சென்று அய்யா நான் தோட்டத்தாலை வாறன் என்றபடி சைக்கிளை நிறுத்தி விட்டு கட்டியிருந்த சாரத்தை சரி செய்வது போல பாவனை செய்தபடி இடுப்பில் இருந்த துப்பாக்கியை திடீரென எடுத்து அவனை நோக்கி இயக்குகிறான். துப்பாக்கி இயங்கி விட்டது. அந்த இராணுவத்தினன் சுருண்டு விழ ஜோனி முதல் தடைவையாக தப்பித்து கொள்கிறான்.

பின்னர் 1987ம் ஆண்டு பங்குனி மாதம் பலாலியை அண்மித்த கட்டுவன் பகுதியில் ஒரு மோதல் சம்பவம்.

அதில் தனது குழுவினருடன் சென்று ஜோனி சண்டையில் ஈடுபட்டு கொண்டிருந்த நேரம் எங்கிருந்தோ எதிரியின் துப்பாக்கி குண்டு ஒன்று ஜோனியின் இடது பக்க கண்ணிற்கு மேலே நெற்றியில் புகுந்து அது வெளியேறாமல் நல்ல வேளையாக மூளையை தாக்காமல் பின்பக்க மண்டையோட்டில் முட்டியபடி உள்ளேயே நின்று விட்டது.

பின்னர் சிகிச்சைக்காக தமிழ்நாடு சென்ற ஜோனிக்கு அப்போதைய தமிழ் நாட்டில் முதலமைச்சராக இருந்த திரு எம்.ஜி.ஆர் அவர்கள் தன்னுடைய உதவியாளர் மூலம் ஜோனிக்கு சத்திர சிகிச்சைக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுக்குமாறு உத்தவிட்டிருந்தார்.

இந்தியாவின் பிரபல வைத்தியர்கள் பலர் சேர்ந்து செய்த சத்திர சிகிச்சை மூலம் தலையில் இருந்த குண்டினை அகற்றினர் இரண்டாவது தடைவையாக ஜோனி சாவை சுகம்விசாரித்து விட்டு திரும்பியிருந்தான்.

இந்தியாவில் ஜோனி தங்கியிருந்த கால கட்டத்தில்தான் ஈழத்தில் இந்தியப் படைகளி ற்கும் புலிகளிற்கும் போர் தொடங்கி யிருந்தது.

மணலாறு பகுதியில் இந்தியப் படைகளு டனான மோதல் தீவிரமடைந்து தலைவரை எப்படியாவது பிடித்து விடுவது என்று இந்திய இராணுவம் போரிட்டு கொண்டிருக்க இந்திய உளவுப் படையும் பிரபாகரனின் இருப்பிடத்தையறிந்து எப்படியாவது அவரை கொலை செய்து விடலாமென நினைத்து தன்னாலான தகிடுதத்த வேலைகளையும் செய்து கொண்டிருந்தது.

அதில் ஒரு முயற்சியாக றோ அதிகாரிகள் ஜோனியிடம் சண்டையை முடிவுக்கு கொண்டு வர சில யோசனைகள் என்று ஜோனியிடம் சில செய்திகளை சொல்லி அதை தலை வரிடம் கொண்டு போய் சேர்க்க சொல்லி விட்டு இந்தியாவிற்கு விசுவாசமான ஒட்டுக் குழுக்களின் உதவியுடன் ஜோனியை பின் தொடர்ந்து சென்று தலைவரின் இருப்பிடத்தை அறிந்து அதை அழிப்பதே இந்திய உளவுபடையின் நோக்கமாகும்.

அதன்படி ஜோனி வவுனியாவில் கொண்டு வந்து விடப்பட்டு தலைவரைப் போய் சந்தித்து வரும்படி வழியனுப்பிவைத்தனர்.

ஜோனிக்கும் இவர்களது திட்டம் புரிந்தது ஆனால் போராட்டத்தின் ஆரம்ப காலந் தொட்டே எதிரிகளை ஏமாளிகளாக்கி செய்தி களை உரிய இடங்களிற்கு எடுத்த சென்ற ஜோனிக்கு இந்திய உளவுப் படையையும் அதன் ஒட்டு குழுக்களையும் ஏமாற்றி தன்னை பின் தொடர முடியாதவாறு சென்று தலைவரை சந்திப்பது ஒன்றும் பெரிய விடயமாய் இருக்கவில்லை. அதன்படியே தலைவரை சென்று சந்தித்து விட்டு திரும்பி வந்தான்.

தங்களை ஏமாற்றி தலைவரின் இருப்பிட த்தை அறிய முடியாதவாறு செய்து விட்டான் என்கிற ஆத்திரத்தில் தூதுவனான நிராயுத பாணியாய் சென்றுவந்த ஜோனியை இந்திய இராணுவம் கொலைசெய்து வீதியிலே வீசி விட்டு சென்று விட்டனர்.

இந்திய வைத்தியர்களால் காப்பாற்ற பட்ட உயிரை இந்திய இராணுவம் நயவஞ்சகமாக பறித்து கொண்டது.

இந்த மாவீரர் வாரத்தில் ஜோனிக்கும் வீர வணக்கங்களை செலுத்தி நினைவுகளை தொடர்வேன்....

காவியப் புதல்வர்கள்

தமிழ்த்தாய் ஈர்ஐந்து மாதம்
இருட்டறையில்
சுமக்கையில் உள்ளிருந்து ஈழ
விடுதலைக்காய்
துடியாய் துடித்த குழந்தைகள் எதிரி
தலை சாய்த்து
தமிழனுக்கு வரலாறு தந்த காவிய
நாயகர்கள்!
தமிழீழம் மலர்வதற்கு தமிழ்த்தாயைக்
காப்பதற்கு
உறக்கமின்றி எல்லையில் நின்று
எதரி பகை முடித்து - மறத்தமிழன்
மாண்பியம் உரைத்த விடுதலை
நெருப்பு மாவீரர்!
விடுதலைக் கனவை நெஞ்சிலே
சுமந்து
வாலிபத்தில் அணிமலை போல் வீரம்
ஏற்று
தேச விடுதலைக்காய் புன்னகையுடன்
மரணத்தை நேசித்த மண்ணின்
மைந்தர்கள்!
அழகாய் வெளியே சிரிப்பார்கள் -
உள்ளே
உணர்ச்சிப் பிழம்பாய் துடிப்பார்கள்
ஈழம் மலர
உயிரையும் கொடுத்தார்கள் - கிலி
கொள்ளாது
வெற்றியையும் பிரசவித்தார்கள் மாவீரர்!
நாம் மானத்தோடு வாழ மலை
குலைந்தாலும்
மனம் குலையாத உறுதி பூண்டு
வாலிபத்தை மனதுக்குள் புதைத்து
தமிழ் தேசியத்திற்கு உயிர் கொடுத்த
கவிதையால் செதுக்க முடியாத புனிதப்
பிறவிகள் மாவீரர்
பூவிற்குள் தேனை வைத்தான்
இறைவன்
நம்மைப் பார் போற்ற வாழ வைத்தார்
மாவீரர்
இவர்கள் கல்லறைக்கு மலர்தூவி
வணங்குவோம்
கார்த்திகைத் தீபம் ஏற்றித் துதிப்போம்

- *சீ. ஞானவேல்*

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள்.
அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல
எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே
மாவீரர்களது மரணம் நிகழ்கின்றது

அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?

நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?

"தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது"

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ,ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

020 8444 6655.

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

"யாமிருக்கப் பயம் ஏன்?"

அழையுங்கள்:

தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்

0208 444 6655

தமிழர் அறங்காவற் கட்டளை
(இலக்கம்: 1117267)

tamil community
"building a better community"
CA House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org